[1980 பிப்ரவரி 2]

(ஆ) அதற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

விடை—(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

Water Research Centre at Coimbatore Agricultural University.

Q. 20?—Thiru N. KITTAPPA: Will the Honourable the Minister for Agriculture and Irrigation be pleased to state;

(a) Whether any Water Research Centre with Swedish Assistance is to be set up in the Coimbatore Agricultural University, and

(b) if so, the details thereof ?

Ans,—(a) & (b) A ** Statment is placed on the Table of the House,

விடை—(அ) மற்றும் (ஆ) * விவர அறிக்கை அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் [*] உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. ஒழுங்குப் பிரச்னைகள்

(அ) அமைச்சர் திரு. சௌந்தரபாண்டியன் பதவி விலகல் குறித்து.

(திருவாளர்கள் துரைமுத்துசாமி, நா. சுந்தரராஜ், சி. ஆறுமுகம் ஆகியோர் எழுந்து நின்று பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்டனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி எல்லோரும் ஒரேயடியாக கேட்கக் கூடாது. தொடர்ந்து எல்லோரும் ஒவ்வொருவராகக் கேட்கலாம். நான் பேரவைக்கு ஒரு வேண்டுகோளாக விடுக்கிறேன். இங்கே நடைபெறும் முக்கியமான ஒரு பொது விவாதத்தில் பல உறுப்பினர்கள் பேசவிருக்கிறார்கள். அவர்களுடைய கருத்தை மிக விரிவாக எடுத்துச் சொல்ல அதிக நேரம் வேண்டுமென்று பேசவிருக்கிற ஒவ்வொரு உறுப்பினரும் என்னிடம் கேட்டிருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணத்தை

(* 322 ஆம் பக்கத்தில் இணைப்பு XIX ஆக அச்சிடப் பெற்றுள்ளது.)

பூர்த்தி செய்ய வேண்டும் என்று விரும்புகிறேன். ஒழுங்குப் பிரச்சினை என்று மற்றவர்களுடைய உரிமையைப் பாதிக்கும் விதத்தில் நிறைய நேரத்தை எடுத்துக் கொள்ளக் கூடாது, அதனால் நான் பேசுகின்ற உறுப்பினர்களின் நேரத்தைக் குறைக்க வேண்டிய நிலை ஏற்படும். அதனால் ஒவ்வொருவராகப் பேசுங்கள். முதலில் திரு. துரை முத்துசாமி பேசட்டும்.

*திரு. துரை முத்துசாமி : தலைவர் அவர்களே, ஒரு ஆண்டுக்கு முன்பு அ.தி.மு.க. அரசில் ஒரு விரிசல் ஏற்பட்டிருப்பதாக அறிந்தேன். இப்போது அமைச்சர் திரு. சௌந்தரப் பாண்டியன் ராஜினாமாச் செய்து விட்டதிலிருந்து அதில் உண்மை இருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் இந்த ஓராண்டுக் காலமாக எவ்வளவு கொடுமை படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து திரு. துரை முத்துசாமி அவர்கள் ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப வேண்டிய விதத்தில் எழுப்ப வேண்டும். இதெல்லாம் தேவையில்லை....

திரு. துரை முத்துசாமி : நான் விரிவாக விளக்க வருகிறேன். தலைவருக்குப் புரிய வைக்க வேண்டும் என்றுதான்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்குத் தெரியும். தாங்கள் எல்லாம் தெரிந்து வைத்துக் கொண்டு எனக்குப் புரிய வைக்க வேண்டும் என்று விளக்கக்கூடியவராக இருப்பதற்கு நன்றி. ஆனால் ஒழுங்குப் பிரச்னையை எழுப்பும் விதம் இதுவல்ல..

திரு. துரை முத்துசாமி : அந்த அமைச்சர் ராஜினாமா செய்திருக்கிறார்கள் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே தெரிவித்து விட்டதாக பத்திரிகையில் பார்த்தேன். அவர் அப்படி ராஜினாமாச் செய்ததற்கு எந்த அறிக்கையும் இந்த அவையில் தாக்கல் செய்யவில்லை, அரசு சார்பாகவும் தாக்கல் செய்யப் படவில்லை. அந்த ராஜினாமா உண்மையா இல்லையா என்று அறிய முடியவில்லை. அது மட்டும் அல்லாமல் திருநாவலூர் தொகுதி உறுப்பினர் திரு. இல. ஆறுமுகம் அவர்கள் தமக்கு தனி இடம் ஒதுக்க வேண்டும் என்று மனு செய்திருப்பதாகத் தெரிகிறது. அதைப் பற்றியும் தகவல் இல்லை. ஆனால் அவர்கள் இரண்டு பேரும் இங்கே இல்லை. அவர்கள் என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் தாங்கள் எழுப்பியிருக்கிற ஒழுங்குப் பிரச்னை எப்படி இருக்க வேண்டும் என்பதை விளக்கிச் சொல்லிவிடுகிறேன். தனி இடம் ஒதுக்கவேண்டும என்று ஒரு உறுப்பினர் கேட்டிருப்பதாக பத்திரிகையில் வந்திருக்கிறதே அதைப்பற்றி உங்களுக்கு கடிதம் வந்திருக்கிறதா? ஒரு

அமைச்சர் ராஜினாமா செய்திருப்பதாக தகவல் வந்திருக்கிறதே... அதைப்பற்றி கடிதம் வந்துருக்கிறதா என்று கேட்டிருக்க வேண்டும். நான் பதில் சொல்லி ஆக வேண்டும். ஆனாலும் நீங்கள் அப்படிக் கேட்டதாக நினைத்துக் கொண்டு பதில் சொல்லிவிடுகிறேன் பேரவைத் தலைவருக்கு எல்லா உறுப்பினர்களும் ஒன்றுதான்.

பேரவைத் தலைவர் என்ற முறையில் சொல்கிறேன். திருநாவலூர் தொகுதி உறுப்பினர் தனி இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கேட்டு எனக்கு எந்தவித கடிதமும் தரவில்லை. இன்னொரு உறுப்பினர் ராஜிநாமா சம்பந்தமாக,— அவர் அமைச்சராக இருந்தாலும் என்னுடைய கருத்தில் உறுப்பினர்தான்— எனக்கு எந்தவித கடிதமும் வரவில்லை. நேரிடையாகவோ, தொலைபேசி மூலமாகவோகூட எந்தச் செய்தியும் வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்...

திரு. துரை முத்துசாமி: அவர்கள் என்னவானார்கள்? வரவில்லையே சபைககு? கடத்தப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எனக்கு எவ்வித புகாரும் வரவில்லை. வந்தால் நடவடிக்கை எடுப்பேன்.

திரு துரை முத்துசாமி: பத்திரிகைகளில் எல்லாம் வந்திருக்கிறதே ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்திரிகைகளில் வருவதை எல்லாம் வைத்துக் கொண்டு நான் நடவடிக்கை எடுக்க முடியாது.

திரு. துரை முத்துசாமி: அப்படியென்றால் அவர்கள் என்னவானார்கள்? ஏன் சபைக்கு வரவில்லை. (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்திரிகைகளில் வரும் செய்தியை வைத்துக் கொண்டு நான் நடவடிக்கை எடுக்க முடியாது. பேரவையின் உறுப்பினர்கள் சொல்கிற புகார் எனக்கு எழுத்து மூலமாக வருமேயானால், அதை விசாரித்து என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை எடுக்கிறேன்.. அதனால் துரை முத்துசாமி அவர்களே பொறுப்பேற்று கொண்டு அப்படி ஒரு நிலைமை இருக்கிறது என்று உறுதிபடுத்திக்கொண்டு அவர்கள் என்னவானார்கள் என்பதைப் பற்றி அறிய புகார் தலைவருக்குத் தந்தால், நிச்சயமாக அந்த உறுப்பினர்களுடைய கௌரவத்தையும், அவர்களுடைய நிலைமைகளையும் காப்பாற்றத் தயார் என்று உறுதி கூறுகிறேன்: (மேசையைத் தட்டும் ஒலி)